பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620024

**Prof. L. Ganesan**
Registrar (i/c)

BHARATHIDASAN UNIVERSITY
TIRUCHIRAPPALLI - 620 024
TAMILNADU, INDIA

*(Accredited with A+ Grade by NAAC in the Third Cycle)*

**<u>கடித எண்:36997/D1/2019, நாள்: 17.04.2023</u>**

பெறுநர்

முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்து கல்லூரிகள்

அய்யா / அம்மையீர்,

பொருள்: பா.ப.க. - பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் - 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் மாற்றியமைக்கப்படவுள்ள பல்வேறு கட்டணங்கள் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. இவ்வலுவலக கடித எண் 36997/D1/2019, நாள்:23.01.2023
2. ஆட்சிக்குழுத் தீர்மானம் எண் 2023.08,நாள்:23.03.2023

----

பார்வை 2-இல் காணும் ஆட்சிக்குழுத் தீர்மானத்தின் அடிப்படையில், இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் தற்பொழுது நடைமுறையில் உள்ள கீழ்க்கண்ட இனங்களில் 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் மாற்றம் செய்யப்பட்டு நடைமுறைக்கு வருகிறது என்ற தகவலை கனிவுடன் தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

1. **நிரந்தர இணைவு நீட்டிப்புக் கட்டணம்: (Extension of Permanent Affiliation Fee) இரத்து செய்யப்படுகிறது:**

   நிரந்தர இணைவு (Permanent Affiliation) பெற்ற பாட பிரிவுகளுக்கு நிரந்தர இணைவு நீட்டிப்புக்கட்டணமாக 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் ஆண்டுதோறும் ஒவ்வொரு பாட பிரிவிற்கும் நிலையாக (Fixed) ரூ.2,000/- மற்றும் 18% GST உடன் செலுத்த வேண்டும் என கல்லூரிகளுக்கு தெரிவிக்கப்பட்ட முந்தைய ஆணை இரத்து செய்யப்படுகிறது.

2. **தொடர் சேவைக் கட்டணம் (Continuous Service Charges):**

   இணைவு பெற்ற கல்லூரிகள் (அரசு கல்லூரிகள் தவிர) ஆண்டுதோறும் தொடர் சேவைக் கட்டணமாக (Continuous Service Charge) ரூ.2,000/- மட்டும் இணைவு நீட்டிப்புக்கட்டணத்துடன் சேர்த்து செலுத்த வேண்டும்.

3. **நிரந்தர இணைவு கோருவதற்கான கால அளவு மாற்றியமைப்பு:**

   தற்காலிக இணைவு பெற்று பயிற்றுவிக்கப்படும் இளநிலை மற்றும் முதுநிலை பாட பிரிவுகளுக்கு நிரந்தர இணைவு (Permanent Affiliation) வேண்டி விண்ணப்பிப்பதற்கு பாடப்பிரிவு தொடங்கி ஐந்தாண்டுகள் முடிந்திருக்க வேண்டும் என்பதனை 07 ஆண்டுகளாக 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் மாற்றியமைக்கப்படுகிறது. எனவே நிரந்தர இணைவு கோரும் பாட வகுப்பு தொடங்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றப்பின்னரே கல்லூரிகள் விண்ணப்பிக்க வேண்டும்.

...2

4. கல்வித்தகுதிச் சான்றிதழ் கட்டணம் **(Qualification Approval Certificate)**

அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பணிபுரியும் முதல்வர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களுக்கு கல்வித்தகுதிச் சான்றிதழ் (Qualification Approval Certificate) வழங்குவதற்கு தற்பொழுது நடைமுறையில் உள்ள கட்டணமான ரூ.1,000/- என்பது 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | கட்டணம் (ரு) |
|---|---|---|
| 01 | அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரி முதல்வர் | 2,500 |
| 02 | அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரி உதவிப் பேராசிரியர் | 2,000 |

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பதிவாளர்** (பொ.)

நகல்:
1. தேர்வு நெறியாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
2. நிதி அலுவலர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
3. இயக்குநர், தொலைக்கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
4. இயக்குநர், கல்லூரி மற்றும் பாடத்திட்ட வளர்ச்சிக்குழு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24
5. இயக்குநர், பல்கலைக்கழக தகவலியல் மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24